நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.221/2021

அரசு தரப்புக்காக அ. சா.1 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நித்யஸ்ரீ | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W.1 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of March 2026.

**<u>முதல் விசாரணை</u>**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 3.56)

நான் தற்போது ஆதிவராகநல்லூர் என்ற கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2021 ஆம் ஆண்டு அகரம் என்னும் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தபோது 17.04.2021 ஆம் தேதி மாலை 3.30 மணிக்கு கிராம உதவியாளர் திரு.பாலசுந்தரம் தொலைபேசியின் மூலமாக எங்கள் கிராமத்தில் பக்கிங்ஹாம் வாய்கால் அருகே பிறந்த சில நாட்களே ஆன பெண் குழந்தை இறந்த நிலையில் கிடக்கிறது என்று தகவல் தெரிவித்தார். நான் அந்த இடத்திற்கு நேரில் சென்று பார்த்தபோது குழந்தை தலையில்

அடிப்பட்ட காயத்துடன் கவிழ்ந்த நிலையில் இறந்து கிடந்தது. நான் பரங்கிபேட்டை காவல் நிலையத்திற்கு சென்று எழுத்து மூலமாக புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (அந்த புகார் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலிசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டனர். பின்னர் அரசு மருத்துவமனையில் குழந்தை பிரேத விசாரணையின்போது என்னை விசாரித்தார்கள். பரங்கிபேட்டை போலிசார் 26.04.2021 தேதி அன்று என்னை தொலைபேசி மூலமாக காவல் நிலையத்திற்கு வரசொன்னார்கள். அங்கு ஆஜர் எதிரி லட்சுமி என்பவர் என் முன்னிலையில் போலிசாரிடம் குழந்தையை தான்தான் கொன்றதாக ஏற்றுக்கொண்டு அந்த குழந்தை இறந்து கிடந்த இடத்தை அழைத்து சென்று காண்பித்தார். நான் அந்த இடத்திற்கு சென்றேன். நானும் என்னுடைய உதவியாளர் திரு.பாலசுந்தரமும் அந்த இடத்திற்கு சென்றோம். அந்த இடத்தி எதிரியை எப்படி கொலை நடந்தது என்று கேட்டார்கள் அவர் சொன்னார். ரத்தக்கரை காய்ந்த நிலையில் உள்ள கருங்கல்லை எதிரி லட்சுமி என்பர் போலிசாரிடம் காண்பித்து எடுத்து கொடுத்தார். என்னிடம் காண்பிக்கப்படும் கருங்கல்தான் ஆஜர் எதிரி போலிசாரிடம் ஒப்படைத்த கல். (அந்த ரத்தக்கரை கலந்த காய்ந்த நிலையில் உள்ள கருங்கல் ஒன்று **அ.த.பொ.சா.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது). அந்த கல்லை கைப்பற்றுவதற்காக தயார் செய்த கைப்பற்றுதல் மகசரில் நானும் என் உதவியாளரும் கையொப்பம் போட்டோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தின் இறுதி பகுதியில் நானும் எனது கிராம உதவியாளரும் போட்டோம். (அந்த ஒப்புதல்

வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது) என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான் (அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அ.த.சா.ஆ.1 புகாரில் எனக்கு தகவல் கொடுத்த கிராம உதவியாளர் பெயரை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு நானும் கிராம உதவியாளரும் ஒன்றாக சென்று பார்த்தோமா என்றால் ஆமாம். போலிசார் விசாரணையின்போது ஆஜர் எதிரி தனக்கு குழந்தை எங்கு பிறந்தது என்று சொன்னார் என்று கேட்டால் அவரது வீட்டிற்கு பின்புறத்தில் உள்ள பகுதியில் பிறந்தது என்று சொன்னார். குழந்தை பிறந்த இடமும் இறந்து கிடந்த இடமும் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் 10 அடி தூரத்தில் உள்ளது. குழந்தை பிறந்தது மட்டும்தான் ஆஜர் எதிரிக்கு தெரியும் என்றும் அதன் பிறகு அவர் மயக்கம் அடைந்துவிட்டார் என்றும் அதன்பிறகு என்ன நடந்தது என்று ஆஜர் எதிரிக்கு தெரியாது என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதின்பேரில் அப்போது பொய் புகார் அளித்து போலிசார் கேட்டுக்கொண்டதின்பேரில் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் எதிரி கொடுக்கவில்லை என்றும் போலிசாரிடம் கல் எதுவும் காண்பிக்கவில்லை என்றும் நான் தற்போது போலிசார் கேட்டுக்கொண்டதன்பேரில் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றும் பிரேத விசாரணையில்

உடன் இருக்கவில்லை என்றும் காவல் நிலையத்தில் கையெழுத்துபோட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்னு சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரியிடம் எவ்விதமான அரசு தரப்பு பொருள் சான்றும் போலிசார் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலிசார் மிரட்டி எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியுள்ளார்கள் என்றும் அதற்கு ஆதரவாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 4.22)

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.